# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2318/54 - 2023 පෙබරවාරි මස 10 වැනි සිකුරාදා - 2023.02.10

2318/54 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண மாகாண சபையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் திருத்தப்பட்ட நியதிச்சட்ட வரைவை கீழே குறிப்பிடுகின்றேன்.

**சந்தன ரணவீர ஆராச்சி,**
மேல் மாகாண விவசாய, காணி , நீர்ப்பாசன, கடற்றொழில், கால்நடை
உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமத்தொழில் அபிவிருத்தி
தொடர்பான அமைச்சின் செயலாளர்.

மேல் மாகாண விவசாய, காணி , நீர்ப்பாசன, கடற்றொழில்,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமத்தொழில்
அபிவிருத்திதொடர்பான அமைச்சில்,
இலக்கம் 204, 7 ஆவது மாடி,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 10.


1A - PG 6210 — 206 (2023/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார நியதிச்சட்டம்*

*மேல் மாகாணத்தினுள் கால்நடை வளத்தினை பாதுகாத்தல், பராமரித்தல், மேம்படுத்துதல் மற்றும் கால்நடை நோய்களைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் அது தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினை நிறுவுதல் மற்றும் அது தொடர்பான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவுமான நியதிசட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகிறது.*

குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்

1. இந்நியதிச் சட்டமானது 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார நியதிச் சட்டம் என அறியப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும்.

## பகுதி I

### மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினை நிறுவுதல்

மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் பதவி மற்றும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினை நிறுவுதல்

2. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் என அறியப்படும் பதவியொன்று இத்தால் உருவாக்கப்படுவதுடன் அம்மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் பதவியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் என அறியப்படும் திணைக்களமொன்று இத்தால் உருவாக்கப்படுகிறது.

1) மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதானியாவார்.

2) இங்கு இதன்பின் ''பணிப்பாளர்'' என குறிப்பிடப்படும் மேல்மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளரிற்கு அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பணிக் குழுவொன்று இருத்தலவசியம்.

3) இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் Iஆம் தர கால்நடை வைத்திய அதிகாரியொருவர் பணிப்பாளராக நியமிக்கப்படல் வேண்டும்.

4) பணிப்பாளரின் அதிகாரங்கள், விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேலதிக மாகாணப் பணிப்பாளர் ஒருவர், விடயம் சார்ந்த நிபுணர் ஒருவர், பிரதிப் பணிப்பாளர்கள், பிரதேச கால்நடை வைத்திய அலுவலர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு அலுவலர்கள் இருத்தல் வேண்டும்.

5) பணிப்பாளர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அதிகாரங்களை மேலதிக மாகாணப் பணிப்பாளர் ஒருவர், விடயம் சார்ந்த நிபுணர் ஒருவர், பிரதிப் பணிப்பாளர்கள், பிரதேச கால்நடை வைத்திய அலுவலர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு அலுவலர்கள் ஆகியோரிடம் எழுத்து மூலம் ஒப்படைக்கலாம்.

6) பணிப்பாளர் உட்பட திணைக்களத்தின் பணிக் குழுவினை நியமித்தல், இடமாற்றம் செய்தல், சேவையிலிருந்து நீக்குதல், ஒழுக்காற்று நிர்வாகம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உரித்துடையதாகும்.

## பகுதி II

### திணைக்களத்தின் நோக்கம், அதிகாரம் மற்றும் விடயங்கள்

திணைக்களத்தின் நோக்கம்

3. மாகாணத்தினுள் கால்நடை வளத்தினை பாதுகாத்தல், பராமரித்தல், மேம்படுத்துதல் அனைத்து கால்நடை நோய்களையும் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிநுட்ப மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் திணைக்களத்தின் நோக்கமாகும்.

4. பணிப்பாளரிடமுள்ள அதிகாரங்கள் கீழ்வருமாறு

பணிப்பாளரின் அதிகாரங்கள்

1) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தாபனங்களுக்குரிய தராதரங்களை நிர்ணயம் செய்தல் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது சோதனை செய்வதற்காக தினத்தின் நியாயமான ஒரு நேரத்தில் கீழுள்ள தாபனங்களினுள் நுழைதல் அல்லது தேவையான ஆவணங்களை சோதனையிடல் அல்லது கைப்பற்றுதல்.

   1) மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் கால்நடைப் பண்ணைகள்.

   2) கால்நடை இனக்கலப்பு, இனப்பெருக்கம், விற்பனை, பொழுதுபோக்கு மற்றும் ஏதேனுமொரு நோக்கத்திற்காக விலங்குகளை வளர்க்கும் இடம், விலங்குகளை அறுக்கும் மடுவங்கள் அல்லது அறுப்புக்கூடங்கள்.

   3) கால்நடை உணவுகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

   4) கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள்.

   5) கால்நடை மருந்துகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

   6) கால்நடை உற்பத்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள் மற்றும் கால்நடை நலன்புரி மற்றும் காப்பகங்கள்.

2) கால்நடைகளிடையே பரவும் மற்றும் கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களைத் தடுப்பதற்குத் தேவையான நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொற்று நோய்களைத் தடுப்பதற்காக மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரிசோதனைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை மேற்கொள்ளல்.

3) மாகாணத்தில், மாகாணத்திற்கு வெளியே மற்றும் மாகாணத்திற்குள்ளே கால்நடைகள், கால்நடை உற்பத்திகள், கால்நடை மருந்துகள், உயிர் உற்பத்திகளைக் காவுதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்ளல்.

4) மாகாணத்தில் தொற்றுநோய் பரவும் சந்தர்ப்பத்தில் மாகாணத்தில், மாகாணத்திற்கு வெளியே மற்றும் மாகாணத்திற்குள்ளே கால்நடைகளைக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்துதல்.

5) கால்நடைகளிடையே தொற்றுநோய் பரவும் சந்தர்ப்பத்தில் தொற்றுக்குள்ளான பகுதியாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடல்.

6) மாகாணத்தினுள் கால்நடை வளத்துறைக்குரிய கீழ்க்குறிப்பிடப்பட்ட தாபனங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்கு செய்தல்.

   1) மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் கால்நடைப் பண்ணைகள்.

   2) கால்நடை இனக்கலப்பு, இனப்பெருக்கம், விற்பனை, பொழுதுபோக்கு மற்றும் ஏதேனுமொரு நோக்கத்திற்காக விலங்குகளை வளர்க்கும் இடம், விலங்குகளை அறுக்கும் மடுவங்கள் அல்லது அறுப்புக்கூடங்கள்.

   3) கால்நடை உணவுகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

   4) கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள்.

5) கால்நடை மருந்துகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

6) கால்நடை உற்பத்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள் மற்றும் கால்நடை நலன்புரி மற்றும் காப்பகங்கள்.

7) திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்காக கட்டணங்களை நிர்ணயம் செய்தல் மற்றும் அறவிடல்.

8) நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்குத் தேவையான பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களைத் தாபித்தல்.

9) இந்நியதிச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.

10) நியதிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரக்கூடிய குற்றங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை சமர்ப்பித்தல்.

11) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களின் கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயத்தினையும் அடைந்து கொள்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களும்.

5. திணைக்களத்தின் விடயங்கள் கீழ்க்குறிப்பிட்ட முறைப்படி மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும்.

1) கால்நடைகளின் தரத்தினை அதிகரித்தல், இனவிருத்திக்கு அவசியமான வசதிகள் மற்றும் தொழிநுட்பத்தினை வழங்குதல்.

2) அனைத்து கால்நடைகளதும் நோய்த்தடுப்பு, சிகிச்சை, நோய் பரிசோதனை மற்றும் அத்தொழிற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

3) கால்நடை வளம் மற்றும் உற்பத்திகளை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பாதுகாத்தல், கொண்டு செல்லல், விநியோகம் செய்தல், விற்பனை செய்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்.

4) மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் கால்நடைப் பண்ணைகளை முகாமை செய்வதற்குத் தேவையான தொழிநுட்ப சேவைகள் மற்றும் வசதிகள் வழங்குதல்.

5) கால்நடைக் கைத்தொழிலுக்குத் தேவையான போசாக்கு வேலைத் திட்டங்களை அறிமுகம் செய்தல், புதிய கால்நடை உணவுகளை அறிமுகம் செய்தல், மாகாணத்திற்குத் தேவையான புல் வகைகளது நடுகைப்பொருட்களை வழங்குதல் மற்றும் புல் நிலங்களைத் தாபித்தல் மற்றும் பாதுகாத்தல்.

6) கால்நடை வளத்துறையினை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

7) ஏதாவதொரு தாபனத்தின் கோரிக்கைக்கு ஏற்ப அதன் தேவைகளுக்காக கால்நடை வளத்திட்டங்களைத் தயாரித்தல், செயற் திட்டங்களை முன்மொழிதல், செயற்படுத்துதல் மற்றும் அதற்குத் துணை புரிதல்.

8) கால்நடை வளத்துறைக்குரிய அபிவிருத்திச் செயற் திட்டங்களைத் திட்டமிடல், தொடர் நடவடிக்கைகள், மதிப்பீடு

9) கால்நடை வளத்துறைக்குரிய அபிவிருத்திச் செயற் திட்ட சேவைகளை வழங்குதல், தெளிவூட்டல் வேலைத் திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

10) கால்நடை வளத்துறைக்குரிய சூழல் மற்றும் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

11) கால்நடை வளத்துறைக்குரிய தகவல் நிலையமொன்றை, தரவு வங்கியொன்றை மற்றும் திட்டமிடல் மற்றும் வழிநடாத்தல் பிரிவொன்றைப் பேணிச் செல்லல்.

12) நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறவேற்றுவதற்குத் தேவையான மனித, பௌதீக, நிதி வளங்களின் முகாமை.

13) ஆய்வுகூடம் மற்றும் ஆய்வுகூட சேவைகளை பேணிச் செல்லல்.

14) நியதிச் சட்டத்துடன் தொடர்புடைய விடயம் அல்லது விடயங்களை மேற்கொள்ளல்.

15) இந்நியதிச் சட்டத்தின் கீழான எந்தவொரு குற்றம் தொடர்பாகவும் நீதிமன்றிற்கு விடயங்களை சமர்ப்பித்தல்.

6. பணிப்பாளரின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அமைச்சர் திணைக்களத்திற்கு விசேடமான அல்லது சாதாரணமான கட்டளைகளை எழுத்து மூலம் வழங்க முடியும் என்பதுடன் பணிப்பாளர் அக்கட்டளைகளை நிறைவேற்றல் அவசியம்.

அமைச்சரினால் கட்டளைகள் வழங்க முடியும் என்பது

7. திணைக்களத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்லல், பணிப்பாளரின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல், இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய வருடாந்த நிர்வாக அறிக்கையொன்றினை ஒவ்வொரு வருடமும் முடிவடைந்து ஆறுமாத காலம் நிறைவடைவதற்கு முன்னர் பணிப்பாளர் விடயப் பொறுப்பு அமைச்சரிற்குச் சமர்ப்பித்தலவசியம்.

வருடாந்த நிர்வாக அறிக்கை

## பகுதி III

### பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

8. (1) மாகாணத்தினுள் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தாபனங்களும் திணைக்களத்தில் பதிவு செய்வதுடன் அவ்வாறு பதிவு செய்யும் அனைவரும் வருடாந்தம் அனுமதிப் பத்திரம் பெறல் அவசியம்.

பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல்

1) மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் கால்நடைப் பண்ணைகள்.

2) கால்நடை இனக்கலப்பு, இனப்பெருக்கம், விற்பனை, பொழுதுபோக்கு மற்றும் ஏதேனுமொரு நோக்கத்திற்காக விலங்குகளை வளர்க்கும் இடம், விலங்குகளை அறுக்கும் மடுவங்கள் அல்லது அறுப்புக்கூடங்கள்.

3) கால்நடை உணவுகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

4) கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள்.

5) கால்நடை மருந்துகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள்.

6) கால்நடை உற்பத்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும், சேகரிக்கும், விநியோகிக்கும் அல்லது விற்பனை செய்யுமிடங்கள் மற்றும் கால்நடை நலன்புரி மற்றும் காப்பகங்கள்.

2) இப்பிரிவின் கீழான பதிவு மற்றும் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைச்சரினால் இயற்றப்படும் ஒழுங்கு விதிகளால் தீர்மானிக்கப்படும் முறைப்படி அமைதல் அவசியம்.

## பகுதி IV

### குற்றம் மற்றும் தண்டணைகள்

குற்றம் மற்றும் தண்டனைகள்

9. கீழ்க்குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு செயற்பாடு அல்லது செயலின்மை இந்நியதிச்சட்டதின் கீழ் குற்றமாவதுடன் அக்குற்றம் தொடர்பாக நீதவான் நீதிமன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் ரூபா ஐம்பதினாயிரத்திற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது 06 மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை ஆகிய இருமுறைகளில் ஒன்றில் சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்படல் வேண்டும்.

1) பணிப்பாளரிற்கு அல்லது பணிப்பாளரினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அலுவலரிற்கு நியதிச்சட்டதின் கீழான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறு செய்தல்.

2) இந்நியதிச்சட்டதின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாமல் உரிய தாபனத்தை நடாத்திச் செல்லல்.

3) கால்நடை வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வைத்தியர் ஒருவரின்றி கால்நடை சிகிச்சை நிலையங்கள், நால்நடை வைத்தியசாலைகள் மற்றும் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்களை நடாத்திச் செல்லல்.

4) கால்நடை வைத்திய சபையின் பதிவு அல்லது அனுமதியின்றி கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளல்.

5) கால்நடை வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வைத்தியர் ஒருவரின் எழுத்துமூல உத்தரவின்றி கால்நடை மருந்துகள், தடுப்பு மருந்துகளை விநியோகம் செய்தல், விற்பனை செய்தல்.

6) கால்நடை வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின்றி உணவுக்காக வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளை வழங்குதல்.

7) நியதிச்சட்டத்தின் கீழுள்ள விடயங்களை மேற்கொள்வதற்காக தகவல்களை கோருமிடத்து அத்தகவல்களை வழங்க மறுத்தல், தவறான தகவல்களை வழங்குதல்.

8) தொற்று நோயொன்று பரவும் சந்தர்ப்பத்தில் தொற்றுக்குள்ளான பகுதி என வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்பகுதியிலிருந்து வெளியே, அப்பகுதிக்குள் கால்நடைகள், கால்நடை உற்பத்திகள் உட்பட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு செல்லல்.

9) இந்நியதிச்சட்டதின் கீழ் இயற்றப்படும் விதிகளை மீறுதல்.

10. இந்நியதிச்சட்டதின் கீழ் அனுமதிப்பத்திரமின்றி இடமொன்றினை நடாத்திச்செல்லும் குற்றத்திற்கு குற்றவாளியாகும் அனைவரும் அவ்வாறு குற்றவாளியானபின் நியாயமான காலப்பகுதிக்குள் பணிப்பாளரிடம் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் அவசியம். அவ்வாறு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளாமல் தொடர்ந்தும் வியாபாரத்தை நடாத்திச்செல்வாராயின் பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அலுவலர் அதுபற்றி நீதவான் நீதிமன்றிற்கு அறிவித்தல் அவசியம். அச்சந்தர்ப்பத்தில் நீதவான் நீதிமன்றினால் குறித்த வியாபாரத்தினை நடாத்திச்செல்வதை பணிப்பாளரிடம் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்வரை முடிவுறுத்தற் கட்டளை மூலம் மூடுதல் சட்டரீதியானதாகும்.

## பகுதி V

### பொது விடயங்கள்

11. (1) இந்நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், வலிதுடையதாக்கல், அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக அதற்குரிய செயன்முறைக் கோவையினை தீர்மானிப்பதற்காக, இந்நியதிச்சட்டத்தின் கீழான பதிவு தொடர்பான

விடயங்களைத் தீர்மானித்தல் உட்பட இந்நியதிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் வழங்கப்படும் அதிகாரங்களுக்கு பாதிப்பில்லாமல் அவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஒழுங்கு விதிகளை உருவாக்க முடியும்.

(2) இப்பிரிவின் கீழ் அமைச்சர் உருவாக்கும் அனைத்து ஒழுங்கு விதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினம் அல்லது அவ்வொழுங்கு விதியில் குறிப்பிடப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

(3) அமைச்சர் உருவாக்கும் அனைத்து ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபின் மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மாகாண சபை அங்கீகரிக்காத ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகரிக்காதிருப்பதற்கு முடிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியற்றதாகக் கருதப்படும், எனினும் அதன் கீழ் முன்பு மேற்கொள்ளப்பட்ட எதற்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படலாகாது.

12. நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறவேற்றுவதற்கு நபர்கள் அல்லது தாபனங்கள் வழங்கும் நிதியுதவிகளை பணிப்பாளர் ஏற்று அவற்றை மாகாண பொது நிதியத்தில் வரவு வைத்தல் அவசியம். திணைக்கள விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள்

13. குற்றவியல் சட்டக் கோவையின் பொருள்கோடல் மற்றும் விடயங்களுக்காக சபையின் அனைத்து உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களும் அரச ஊழியர்களாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் இலஞ்ச சட்டத்தின் தொழிற்பாடுகளுக்காக பணியகம் அட்டவணைப்படுத்தப்பட்ட தாபனமாகக் கருதப்படல் வேண்டும். திணைக்கள அலுவலர்கள் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவைலயின் கீழ் அரச ஊழியர்களாக கருதப்படல் அவசியம் என்பது

14. இந்நியதிச் சட்டத்தினை செயற்படுத்தும் யாரேனும் அரச அலுவலர் ஒருவரினால் நன்னோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் தவிர்க்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவருக்கெதிராக எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாகாது.

15. பதங்கள் தொடர்பாக வேறு பொருள்கொள்ளல் தேவைப்பட்டாலன்றி, இந்நியதிச்சட்டத்தில் பொருள் கொள்ளல்

"மாகாணம்" என்பது மேல் மாகாணம் எனவும்,

"மாகாண சபை" என்பது மேல் மாகாண மாகாண சபை எனவும்,

"அமைச்சர்" என்பது மேல் மாகாண அமைச்சரவையின் கால்நடையுற்பத்தி மற்றும் சுகாதார விடயப் பொறுப்பு அமைச்சர் எனவும்,

"பிரதான செயலாளர்" என்பது மேல் மாகாண பிரதான செயலாளர் எனவும் கருதப்படும்,

16. இந்நியதிச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும். முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறும் என்பது

EOG 02-0117

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.